கவன ஈர்ப்புகள்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, புதிய துணைக் குழாய் அமைக்கக்கூடிய திட்டம் ரூ. 1.15 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதால் எவ்வளவு விரைவில் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக அரசு அதை செயல்படுத்தும்.

(29) ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் உள்ள குடிநீர் தட்டுப்பாடு.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, ''ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் வாரம் ஒருமுறை குடிநீர் வழங்கப்படுவதால் அப் பகுதி வாழ் மக்களுக்கு சரிவர குடிநீர் கிடைக்காத நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

1. ஆத்தூர் நகரில் உள்ள இரண்டு நீரேற்று நிலையங்கள் மூலம் சாதாரண நாட்களில் 15,00,000 லிட்டர்கள் குடிநீர் விநியோகம் செய்யலாம். ஆனால் தற்போது வறட்சியால் 3,96,000 லிட்டர்தான் குடிநீர் கிடைக்கிறது. இது தவிர 36 ஆழ்குழாய் கிணறுகள் மூலமும், 30 திறந்த வெளிக் கிணறுகள் மூலமும் ஒரு நாளைக்கு 3,16,800 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. இவற்றின் மூலம் நகரில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு மொத்தம் 14.78 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 75 லிட்டர் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும்.

2. இந்த குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாள் முதல் தற்போது நான்கு தனியார் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலம் நான்கு நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

3. கடுமையான குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள சில நகராட்சிகளில் ஆத்தூர் நகராட்சியும் ஒன்று. நகராட்சிப் பகுதிகளில் குழாய் கிணறுகள் தோண்டுவதற்காக அரசாணை நிலை எண் 562, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாளில் ரூ. 80 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் ஆத்தூர் நகராட்சி

கவன ஈர்ப்புகள்

(டாக்டர் கா. காளிமுத்து)

யும் இடம் பெற்றுள்ளது. மேலும் அரசாணை நிலை எண் 561, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாளில் நகராட்சிப் பகுதிகளில் லாரிகள், டிராக்டர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்காக ரூ. 25 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ஆத்தூர் நகராட்சியும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. சேலம் மற்றும் சில நகராட்சிகளுக்கும் வழியோர கிராமங்களுக்கும் உலக வங்கியிலிருந்து 33 கோடி ரூபாய் உதவியுடன் காவிரி நதியிலிருந்து நீர் கொணரும் திட்டம் ஒன்று தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயலாக்கத்தில் உள்ளது. அத்திட்டத்தில் ஆத்தூர் நகாராட்சியும் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடையும்போது ஆத்தூரில் குடிதண்ணீர் பிரச்சினை தீரும்.

திரு. சி. பழனிமுத்து: தலைவர் அவர்களே, ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் வாரம் ஒரு முறைதான் தண்ணீர் கொடுக்கிறார்கள். இந்த அறிக்கையில் நான்கு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் கொடுக்கப்படுவதாக தெரிவித்திருக்கிறார்கள். கடுமையான குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் அதனை சமாளிக்க 1986ஆம் ஆண்டு மே திங்கள் 2ஆம் நாளில் நகராட்சிப் பகுதிகளில் குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்காக 80 லட்சம் ரூபாய் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதிலே எத்தனை ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்படும்? ஆத்தூர் நகராட்சியில் பல வார்டுகளில் குடிநீர் விநியோகம் சரியாக செய்யப்படுவதில்லை. ஆகவே குடிதண்ணீர் வழங்க ஆழ்துளை கிணறுகள் குறைந்தது 20வது போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மேட்டூரிலிருந்து ஆத்தூர் வருகிற உலக வங்கி குடிதண்ணீர் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தவும் வேண்டும். அதற்கான அலுவலர்கள் நியமிக்கப்படவில்லையென்று கூறுகிறார்கள். ஆகவே குடிதண்ணீர் திட்டம் ஆத்தூரிலிருந்து மேலும் தலைவாசலுக்கு நீட்டிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வறட்சியை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 2,500 ஆழ்துளை கிணறுகள் போடுவதற்கு உத்தேசித்திருக்கிறோம். அதிலே ஆத்தூரினுடைய நிலைமையைக் கருதிப் பார்த்து, எந்த அளவிற்கு ஆத்தூருக்குப் போட வேண்டுமோ, வாய்ப்பு இருக்குமோ அவைகளைப் போடுவதற்கு அரசு முன்வரும். அதைப் போலவே உலக வங்கியினுடைய திட்டமும் செயல்படவிருக்கிறது. அதன் மூலம் ஆத்தூர் பலனடையும்.

கவன ஈர்ப்புகள்

(திரு ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்)

(30) விருதுநகர் நகராட்சியில் தண்ணீர் தட்டுப்பாடு

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ''விருது நகர் நகராட்சியின் குடிநீருக்கான கோடைக்கால நீர்த்தேக்கம் வறண்டு விட்டபடியால் குடிநீர் கிடைக்காமல் அப்பகுதி மக்கள் படும் இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

விருதுநகர் நகராட்சியின் மக்கட்தொகை 70,000 ஆகும். அன்றாடம் இம்மக்களுக்கு 15 இலட்சம் லிட்டர் குடிநீர் தேவைப் படுகிறது. பருவமழை இன்மையால் ஆனைக் கோட்டம் என்ற இடத்திலுள்ள நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் குறைந்துவிட்டது. எனவே மக்களுக்கு அன்றாடம் 7 இலட்சம் லிட்டர் அளவு குடிநீர்தான் வழங்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக ஒரு நபருக்கு தற்பொழுது ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. இந்நகராட்சியிலுள்ள 143 கைப் பம்புகளில் தற்பொழுது 92-ம், 43 மின் பம்புகளில் 36-ம் நன்கு வேலை செய்யும் நிலையிலுள்ளன. இவைகள் மூலமாக 4 இலட்சம் லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. ஆனால் இந்த குடிநீர் கூட உவர்ப்பாக உள்ளது.

இந்நகராட்சியில், தற்பொழுது நிலவி வரும் பிரச்சனையை சமாளிக்க ஆனைக்கோட்டம் என்ற நீர்த்தேக்கத்தில் 10 ஆழ் துளைக் கிணறுகள் தோண்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விருது நகருக்கு அண்மையிலுள்ள கௌசிக நதிக்கரையில் 5 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவைகளில் ஒரு ஆழ்துளை கிணறு தோண்டும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய கிணறுகளின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பல வறட்சி நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதற்கான நிதி வழங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

தவிர விருதுநகருக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ. 138 இலட் சத்தில், ஒண்டிபுலிநாயக்கனூர் என்னுமிடத்தில் ஒரு நீர்த் தேக்கம் உருவாக்க ஒரு திட்ட அறிக்கையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. விருதுநகர் நக ராட்சியும் இதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற அரசின் அனுமதி பெற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.